# கோட்டை ஷெல் தாக்கி ஜவுளிக்கடை எரிந்தது
# வீடுகளும், மேலும் பல கடைகளும் சேதமுற்றன

Registered as a Newspaper in SriLanka. விலை ரூபா ஒன்று

ஈழமுரசு

முரசு 3 6-8-86 புதன் (ஆடி 21 கலி 29) முழக்கம் 183

கோட்டை இராணுவ முகாமிலிருந்து நேற்று முன்தினம் இரவு மேற்கொள்ளப்பட்ட 'ஷெல்' தாக்குதல்களால் யாழ்நகரிலுள்ள சுமார் பத்துக்கு மேற்பட்ட கடைகளும், நான்கு வீடுகளும் சேதமடைந்துள்ளன. இதனால் சுமார் பதினைந்து இலட்சம் ரூபாவிற்குமேல் நட்டம் ஏற்பட்டிருக்கலாம் என மதிப்பிடப்படுகிறது. கோட்டை முகாமிலிருந்து இராணுவத்தினர் வெளியே வந்தபோது போராளிகள் அவர்களை இடைமறித்துத் தாக்கியதைத் தொடர்ந்தே இராணுவத்தினர் முகாமிலிருந்து ஷெல் தாக்குதலை மேற்கொண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. இரவு சுமார் பதினொரு மணியளவில் கோட்டை முகாமிலிருந்து வெவ்வேறு பகுதிகளாலும் இராணுவத்தினர் நடைபவனியாக வெளியேவர முயற்சித்தபோது காவலுக்கு நின்ற போராளிகள் அவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம்செய்து கடுமையான தாக்குதலை மேற்கொண்டார்கள். படையினரும் பதிலுக்குத் துப்பாக்கிப் பிரயோகம்செய்து பதில் தாக்குதலை மேற்கொண்டதால் இரு பகுதியினருக்குமிடையே நீண்ட நேரம் நேரடிமோதல் இடம்பெற்றது. இதனைத் தொடர்ந்து கோட்டை முகாமிலிருந்து நகரின் பல பகுதிகளை நோக்கியும் 'ஆட்டலரி ஷெல்' தாக்குதல்கள் (6ஆம் பக்கம் பார்க்க)

★ ஜனாதிபதியின் பயமுறுத்தலுக்கு அமைச்சர் நாராயணன் பதிலடி!

# ராணுவத் தீர்வா? மோசமான விளைவுகளை எதிர்கொள்ள நேரும்!

## போர் மூண்டால் இலங்கைக்கே பேரழிவு எனவும் எச்சரிக்கை

இலங்கையின் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்ள முயற்சி எடுக்கப்பட்டால், இலங்கை மோசமான விளைவுகளை எதிர்நோக்க வேண்டியிருக்கும் என்று இந்திய வெளியுறவு இணையமைச்சர் திரு. கே. ஆர். நாராயணன் எச்சரித்துள்ளார்.

தமிழர்களுக்கு எதிராக இராணுவ நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஜனாதிபதி ஜெயவர்த்தன கூறியதாகச் சில பத்திரிகைகளில் வெளிவந்த செய்தி தொடர்பாக நேற்று லோகசபையில் பல உறுப்பினர்கள் கேட்டபோது அவர் மேற்கண்ட எச்சரிக்கையை இலங்கை அரசுக்கு விடுத்தார்.

இது தொடர்பான பல துணைக் கேள்விகளுக்கு திரு. நாராயணன் பதிலளிக்கையில் போர் மூலம் இப் பிரச்சினைக்குத் தீர்வுகாண முயன்றால் அந்நாட்டிற்குப் பேரழிவு ஏற்படும் என்று இந்தியா தெளிவுபடுத்தியிருப்பதாகக் கூறினார்.

அனைத்துத் தரப்புக்கும் திருப்தியளிக்கக்கூடிய அமைதியான அரசியல் தீர்வுகாண தீவிர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுவரும் இத்தருணத்தில் இலங்கை ஜனாதிபதியின் இவ்வறிக்கை கவலையளிப்பதாக உள்ளது என்று உறுப்பினர்கள் திரு. ஆலடி அருணா, திரு. எம். எஸ். குருபாதசுவாமி, திரு. விஜயமோகன்ரெட்டி ஆகியோர் குறிப்பிட்டனர்.

"இனப்பிரச்சினைக்கு அமைதியான வழியில் அரசியல் தீர்வுகாண இலங்கை அரசு பல்வேறு வழிகளைக் கண்டறியும்" என திரு. நாராயணன் நம்பிக்கை தெரிவித்தார்.

இது தொடர்பாக இந்தியா பல்வேறு யோசனைகளைத் தெரிவித்திருப்பதாகவும் இதனடிப் —6ம் பக்கம் பார்க்க

## புங்குடுதீவு இளைஞர்கள் கைது

(வவுனியா)

வெளிநாடுகளுக்குச் செல்வதற்காக பஸ்ஸில் சென்ற புங்குடுதீவு நான்காம் வட்டாரத்தைச் சேர்ந்த சுப்பையா பாலசிங்கம், சின்னையா சின்னத்துரை ஆகிய இருவரும் வவுனியா முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். நேற்று கொழும்பிலிருந்து ரயிலில் வந்த புங்குடுதீவு மூன்றும் வட்டாரத்தைச்சேர்ந்த சின்னையா சத்தியகுமார் என்ற இளைஞரும் ராணுவத்தால் கைது செய்யப்பட்டுள்ளார்.

## கமாண்டோவுடன் புலிகள் கடலில் நடத்திய மோதல்

நேற்றுக்காலை முரக்கொட்டாஞ்சேனைக்கும் கிரானுக்கும் இடைப்பட்ட முகத்துவாரப் பகுதியால் கடலில் படகுகளில் ரோந்து சென்ற கொமாண்டோக்களுக்கும் - போராளிகளுக்குமிடையே நேரடிமோதல் இடம்பெற்றது.

மட்டக்களப்பு மாவட்டத்தின் பல பகுதிகளிலுமுள்ள தமிழ் மீனவர்களிடமிருந்து பறிமுதல் செய்யப்பட்ட படகுகளிலேயே கொமாண்டோக்கள் இந்தக் கடல் ரோந்தினை மேற்கொண்டிருந்தார்கள்.

இதுகுறித்து விடுதலைப்புலிகள் விடுத்த அறிக்கையில் —6ம் பக்கம் பார்க்க.

பிரபாகரன் வேண்டுகோள்:

## இலங்கைக்கான உதவிகளை றீகன் நிறுத்த வேண்டும்!

(நியூயோர்க்)

இலங்கைக்கு வழங்கப்படும் சகல உதவிகளையும் நிறுத்தி வைக்குமாறு அமெரிக்க அரசாங்கத்திடம் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் வே. பிரபாகரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

"நாங்கள் இனப்படுகொலைக்கு உள்ளாயிருக்கும் நாட்டின் மக்கள் என்பதை உணர்ந்து, இலங்கைக்கு வழங்கும் சகல உதவிகளையும் ஜனாதிபதி றீகன் நிறுத்தவேண்டும்" எனவும் "நியூஸ் வீக்" சஞ்சிகைக்கு அளித்துள்ள பேட்டியில் பிரபாகரன் தெரிவித்துள்ளார்.

இப்போது அரசாங்கம் — 6-ம் பக்கம் பார்க்க

## புளொட் தமது தலைமையில் இயங்குவதாக 'உமா' கடிதம்

(சென்னை)

தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் (புளொட்) இப்பொழுதும் தமது தலைமையில்தான் இயங்குவதாக அதன் தலைவரான உமாமகேஸ்வரன் சகல பத்திரிகைகளுக்கும் தபால் மூலம் அனுப்பிவைத்துள்ள கடிதமொன்றில் தெரிவித்துள்ளார்.

சில தீயசக்திகள் கழகத்தை —6ம் பக்கம் பார்க்க

## அரச அதிபரின் அறிக்கை

"யாழ். பழைய பூங்காவிலுள்ள அரச அதிபர் வாசஸ்தலம் உடைக்கப்பட்டுச் சேதம்" என்ற தலைப்பிலும், "காணிப்பதிவு கந்தோரில் பல உறுதிகள் மாயமாகின" என்ற தலைப்பிலும் நேற்று வெளியான செய்திகள் தொடர்பாக யாழ். அரசாங்க அதிபர் திரு. எம். பஞ்சலிங்கம் பின்வரும் அறிக்கையை விடுத்துள்ளார்:-

"யாழ். பழைய பூங்காவிலுள்ள அரச அதிபரின் வாசஸ்தலத்தில் உள்ள கதவுகளோ, யன்னல்களோ, தளபாடங்களோ எதுவும் சேதப்படுத்தப்படவில்லை.

அத்துடன் காணிப்பதிவு கந்தோரில் உள்ள உறுதிகளும், முத்திரைகளும் களவாடப்பட் —6ம் பக்கம் பார்க்க

## குமுழமுனை: ராணுவம் சுட்டு ஒருவர் பலி; சிலருக்கு காயம்

முல்லைத்தீவிலுள்ள குமுழமுனை என்ற இடத்தில் மீன் பிடித்துக் கொண்டிருந்தவர்கள் மீது ராணுவத்தினர் நேற்று முன்தினம் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒருவர் கொல்லப்பட்டதாகவும் மேலும் சிலர் காயமடைந்ததாகவும் தெரியவருகிறது.

டொலர் பாமிலிருந்து சென்ற ராணுவத்தினரே இத்தாக்குதலை மேற்கொண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. இச்சம்பவத்தில் கொல்லப்பட்டவர் குமுழமுனையைச் சேர்ந்த ராசு (49) என அடையாளங் காணப்பட்டுள்ளது.

படுகாயமடைந்த சிறீகரன் யாழ். பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

வவுனியாவில்

## ராணுவ தடைமுகாம் வாபஸ்; கைதான 13 பேர் பூஸாவுக்கு

(வவுனியா)

வவுனியா கச்சேரி சந்தியிலும், ஸ்ரேஷன் சந்தியிலும் இயங்கிவந்த இராணுவ தடைமுகாம்கள் வாபஸ் பெறப்பட்டுள்ளன.

இரவு நேரங்களில் மட்டும் —6ம் பக்கம் பார்க்க

## திருமலைரயில்கண்ணிவெடியில் சிக்கி சாரதியுடன் ஐவர் காயம்

திருமலைக்கும் தம்பலகாமத்துக்குமிடையே சரக்கு ரயில் ஒன்று நேற்று நிலக் கண்ணி வெடியில் சிக்கியதால் ரயில் சாரதி உட்பட ஐந்து புகையிரத ஊழியர்கள் படுகாயமுற்றனர்.

திருமலையிலுள்ள 'பிரீமா' மா ஆலையிலிருந்து மா மூடைகளை ஏற்றிக்கொண்டு ரயில் கொழும்பு நோக்கிப் புறப்படுகையில் இந்தத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

திருமலை கடற்படை முகாமுக்கும் தம்பலகாமத்துக்குமிடையே புதைத்து வைக்கப்பட்ட நிலக் கண்ணியில் புகையிரதம் அகப்பட்டதாகவும், புகையிரதம் அண்மிப்பதற்கு முன்னதாகவே கண்ணிவெடி வெடித்ததாலேயே உயிரிழப்புகள் தவிர்க்கப்பட்டதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## அனுராதபுரத்தில் கல்லெறி

(வண்ணார்பண்ணை)

கொழும்பிலிருந்து பிரயாணிகளுடன் யாழ்நகர் நோக்கி வந்து கொண்டிருந்த பஸ்ஸிற்கு அனுராதபுரத்துக்கு அண்மையில் காடையர்களால் கற்கள் வீசப்பட்டபோது காயமடைந்த ஏ. பி. யோகேஸ்வரன் (37 வயது) அனுராதபுரம் வைத்தியசாலையிலிருந்து யாழ். மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டுள்ளார்.

## வரி விளம்பரம்


### தவறிவிட்டது

எனது H 0486155 இலக்க கடவுச்சீட்டும், V 640162996 இலக்க தேசிய அடையாள அட்டையும், மட்ருஸ் செல்வதற்கான பிரயாணச் சீட்டும் கடந்த வாரம் வெளிக்கண்டல் சந்திக்கும் பரந்தனுக்குமிடையில் தவறிவிட்டது. இதை எடுத்தவர்கள் தயவு செய்து பின்வரும் முகவரியிற் சேர்க்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். செ. குலசேந்திர சேகரம், கண்டாவளை. B/1441

### விற்பனைக்கு

மிருசுவில் பழைய வாய்க்கால் கண்டி வீதிக்கருகில் வீடு கட்டக்கூடிய தென்னங்காணி பதினெரு பரப்பு விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்க: குணபாலா ஸ்ரோர்ஸ், ஆஸ்பத்திரியருகாமை, மிருசுவில். R/24645


## ஏழாலையில்...

(யாழ்ப்பாணம்)

ஏழாலை அருள்மிகு புவனேஸ்வரி அம்பாள் தேர்த் திருவிழா நாளை வியாழக்கிழமை வெகு விமரிசையாக நடைபெறுகிறது. பிரபல வித்வான் பாலகிருஷ்ணன் கோஷ்டி பங்கு கொள்ளும் நாதஸ்வர இசை நிகழ்ச்சியும் இடம்பெறும். விழாவுக்கான விரிவான ஏற்பாடுகளை ஆலய நிர்வாகி திரு. சி இரத்தினம் மேற்கொண்டுள்ளார்.

## பயிற்சி கருத்தரங்கு

சர்வதேச சமாதான ஆண்டினை ஒட்டி வதிரி தமிழ்மன்ற இளைஞர் கழகமும் அறவழிப் போராட்டக்குழுவும் இணைந்து வடமராட்சிப் பகுதியிலுள்ள இளைஞர் யுவதிகளுக்கு இரண்டு நாள் பயிற்சிக் கருத்தரங்கினை நடாத்த ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

வதிரி தமிழ் மன்ற இளைஞர் கழகத்தலைவர் செல்வி எ. சூரியகலாவின் தலைமையில் வதிரி தமிழ் மன்ற மண்டபத்தில் அபிவிருத்திப் பணியில் இளைஞர் என்ற தலைப்பில் கருத்தரங்கு நடைபெறவுள்ளது.

இளைஞர் கல்வி, சுகாதாரம், தலைமைத்துவம், கைத்தொழில் அபிவிருத்தி, பனை அபிவிருத்தி, கலாச்சாரம் போன்ற கிராமிய அடிப்படைத்தேவைகளுக்கான விரிவுரைகளும் கலந்துரையாடல்களும் இடம்பெறவுள்ளன.

வடமராட்சிப் பகுதியிலுள்ள பொதுஸ்தாபனங்களின் 50 பங்குபற்றுனர்கள் இக்கருத்தரங்கில் கலந்துகொள்கிறார்கள்.

முதலாம் நாள் ஆரம்ப விழாவை கரவெட்டி உதவி அரச அதிபர் இ. ஐயாத்துரை அவர்கள் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைப்பார். மாவட்ட இளைஞர் சேவை அலுவலர் திரு. ந. கார்த்தி, நிஸ்கோ முகாமையாளர் செல்வி S. மகேஸ்வரி ஆகியோர் பிரதம விருந்தினர்களாகக் கலந்து கொள்கிறார்கள்.

இரண்டாம் நாள் நிறைவு விழாவில் அறவழிப் போராட்டக்குழுவின் தலைவர் திரு. எஸ். துரைராசா, செயலாளர் திரு. க. ஜீவகதாஸ் ஆகியோர் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்கிறார்கள். இவ் இரண்டு நாள் பயிற்சிக் கருத்தரங்குக்கான ஒழுங்குகளை வதிரி தமிழ் மன்ற இளைஞர் கழக செயலாளர் திரு. சி. குமாரராஜன் மேற்கொண்டு வருகின்றார்.


### சவூதி அரேபியாப் பயண ஒழுங்கு

JUBAIL HARBOUR LABOURERS

சவூதி அரேபியாவில் JUBAIL துறைமுகத்தில் (LABOURER) தொழிலாளர் தரத்தில் வேலை செய்ய விரும்புபவர்களுக்கு இம்மாதம் 23ந் திகதியும், 27ந் திகதியும் பிரயாணம் செய்வதற்கான ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படும். விரும்புவோர் பாஸ்போட், 6 படங்கள் என்பனவற்றுடன் தாமதியாது கீழ் உள்ள முகவரியில் வந்து சந்திக்கவும்.

முகவரி:-

**K.M. வைத்தீஸ்வரன்**

கச்சாய் வீதி, கொடிகாமம்.

முக்கிய குறிப்பு:- (25 வயதிற்குக் குறையாமலும் 40 வயதிற்கு மேற்படாமலும் இருக்க வேண்டும்.)

R/24643


ச. ச. நிலையத் தலைவர் குமுறல்

## ஆணையாளர் நன்முயற்சி அதிகாரிகள் அசிரத்தை

(வண்ணார்பண்ணை)

யாழ். மாநகர சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் அமைந்திருக்கும் சனசமூக நிலையக் கட்டடங்களை பூர்த்தி செய்வதற்காக ஆணையாளர் எடுக்கும் தீவிர முயற்சிக்கு சபை அதிகாரிகள் ஈடுகொடுக்க முடியாதளவிற்கு திணறிக் கொண்டிருக்கிறார்கள்.

இவ்வாறு நாவாந்துறை சென் மேரிஸ் சனசமூக நிலையப் பொதுக் கூட்டத்தில் உறுப்பினர்கள் கட்டடம் சம்பந்தமாக குரலெழுப்பிய கேள்விக்கு விடையளிக்கு முகமாக பேசுகையில் எழுத்தாளரும் சனசமூகத் தலைவருமாகிய டானியல் அன்ரனி தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசும் போது, சனசமூக நிலைய கட்டடத்தை பூர்த்தி செய்வதற்காக ஆணையாளரிடம் சென்று விபரங்களைக் கொடுத்த பின்னர் அவர் சிபார்சு செய்யப்பட்ட பின்னரும் அதிகாரிகள் அசிரத்தையுடன் செயற்படுவதால்தான் இக்கட்டடம் பூர்த்தியாக்க முடியாதுள்ளது.

எனவே இச் சம்பவத்தினை ஆணையாளரிடம் மீண்டும் சென்று புகாரிட்ட போது தான் அதிகாரிகளின் அலட்சியம் ஆணையாளருக்கு தெரிய வருகின்றது எனவும் பேசினார்.

## பயிற்சி வகுப்பு

(சரசாலை)

சாவகச்சேரி கல்வி வட்டார வசதிகள் சேவைகள் கட்டண பாடசாலை அபிவிருத்திச்சங்க நிதியில் நியமனம் பெற்றுள்ள ஆரம்ப வகுப்பு முதல் ஆறு வரை ஆசிரியர்களுக்கான பயிற்சி வகுப்பு இம்மாதம் 25-ந் திகதி தொடக்கம் 29-ம் திகதிவரை சாவகச்சேரி மகளிர் மகாவித்தியாலயத்தில் நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

மேற்படி பயிற்சியில் கலந்து கொள்ள விரும்பும் வசதிக் கட்டண ஆசிரியர்கள் 10-ம் திகதிக்கு முன் வட்டாரக் கல்வியதிகாரி அலுவலகத்திற்கு விண்ணப்பத்தை அனுப்புமாறு கேட்கப்பட்டுள்ளது. மேற்படி ஒழுங்குகளை சாவகச்சேரி வட்டாரக் கல்வியதிகாரி திரு. அ. தங்கராசா மேற்கொண்டுள்ளார். மேற்படி பயிற்சிவகுப்பில் அதிபர் திரு. க. துரைரத்தினம் உட்பட பலர் விரிவுரை நிகழ்த்துவர்.

## மகோற்சவம்

(சுழிபுரம்)

வட பகுதியிலுள்ள பிரசித்தி பெற்ற விஷ்ணு ஆலயமான பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் கோவில் வருடாந்த மஹோற்சவம் இம்மாதம் 12ம் திகதி செவ்வாய்க்கிழமை துவஜாரோஹணத்துடன் ஆரம்பமாகிறது.

16ம் திகதி பெரிய சப்பறத் திருவிழாவும், 28ம் திகதி வியாளனன்று இரத உற்சவமும் நடைபெறவுள்ளன.

## சித்திவிநாயகர் மகோற்சவம்

மண்டைதீவு திருவெண்காடு சித்திவிநாயகர் தேவஸ்தான வருடாந்த மகோற்சவம் எதிர்வரும் 10ம் திகதி ஞாயிற்றுக்கிழமை துவஜாரோகணத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்து நாட்கள் நடைபெறவுள்ளது. 17ந் திகதி வேட்டைத் திருவிழாவும் 18ந் திகதி இரதோற்சவமும் 19ந்திகதி தீர்த்தோற்சவமும் இரவு துவஜா அவரோகணமும் நடைபெற்று உற்சவங்கள் முடிவுறும்.

## படகுச்சேவை ஒழுங்காகும்?

(நெடுந்தீவு)

பலதினங்களாக ஒழுங்கின்றி மேற்கொள்ளப்பட்டு வந்த நெடுந்தீவு – குறிகாட்டுவான் படகுச்சேவை முதலாந் திகதியிலிருந்து தினமும் மேற்கொள்ளப்படவேண்டும் என நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் திரு. ஏ. ரி. அரியரத்தினம் கேட்டுக்கொண்டதற் கிணங்க நெடுந்தீவுப் படகுச் சேவை தினமும் நடைபெறும் எனத் தெரியவருகிறது.

அடிக்கடி சீர்குலையும் இப் படகுச் சேவை இம்முறை சீர்குலையாதவாறு தொடர்ந்து மேற்கொள்ளப்படும் என மக்கள் நம்பிக்கை கொள்கின்றனர்.

## களவுகளை தடுக்க நடவடிக்கை தேவை

(குருநகர்)

குருநகர் பகுதியில் கடந்த சில நாட்களாகத் திருட்டுக்கள் அதிகரித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. கடந்த வாரம் சின்னக்கடையில் நிறுத்தி வைத்திருந்த குருநகரைச் சேர்ந்த ஒருவரது புதிய சைக்கிள் திருடப்பட்டுள்ளது.

குருநகர் அடப்பன் வீதியைச் சேர்ந்த கஸ்பார் பொன்னுத்துரை என்பவரது ஆடு களவு போயுள்ளதென்றும், ஒரு மாதத்திற்கு முன்பாக இவரது வீட்டில் நிறுத்தி இருந்த சைக்கிள் திருட்டுப் போனதாகவும் தெரிவிக்கப்பட்டது.

சிவில் நிர்வாகம் முற்றாக அற்றுப்போயிருக்கும் இந்நிலையில் இதுபோன்ற களவுகளும், குற்றச் செயல்களும் அதிகரித்து வருவதை மட்டுப்படுத்த இளைஞர் குழுக்களும், இணக்க சபை, விழிப்புக் குழு போன்ற அமைப்புகளும் முன்வந்து சேவையாற்ற வேண்டுமென பொது மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

## பிறந்தநாள் வாழ்த்து

❀ யாழ். பஜார் லேன், சந்திரன் சாந்தாதேவி தம்பதியின் மகன் செந்தில்ராஜ் இன்று தனது இரண்டாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

❀ ஆனைக்கோட்டை சிவசாமி இராஜமலர் தம்பதியின் மகன் திவாகரன் இன்று தனது எட்டாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்.

❀ கொக்குவில் மேற்கு, வைத்தியநாதன் செல்வமணி தம்பதியின் மகள் சிவசக்தி இன்று ஏழாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

❀ சுண்டுக்குளி சோமசுந்தரம் லேன், ஜெயானந்தராசா நவனேஸ்வரி தம்பதியின் மகன் துஷ்யந்தன் தனது மூன்றாவது பிறந்தநாளை இன்று கொண்டாடுகிறார்.

சாவகச்சேரியில்

## மூன்று நாள் பொருட்காட்சி நடத்துவதற்கு ஏற்பாடு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி கல்விவட்டாரப் பாடசாலை மாணவர்களின் கைவண்ணத்தாலான கலை, விஞ்ஞான, கலாச்சார மணியல பொருட்காட்சியின் சாவகச்சேரி வட்டாரப் பொருட்காட்சி அடுத்தமாதம் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் ஆரம்பமாகி மூன்று நாட்கள் நடைபெறும்.

இந்த வட்டாரப் பொருட்காட்சியில், கடந்தஜூன்மாதம் தொடக்கம் பாடசாலைகளில் நடைபெற்ற கண்காட்சியில் வைக்கப்பட்டிருந்த பொருட்களில், திறமையெனத் தெரிவு செய்யப்பட்ட பொருட்களே இடம்பெறுகின்றன. இக்கண்காட்சியைப் பார்த்துக் களிப்பதற்கு மாணவர் முதல் பெற்றோர் வரை நுழைவு கட்டணம் செலுத்த வேண்டும்.

செப்டெம்பர் மாதம் 10ம் திகதி ஆரம்பமாகும் இக் கண்காட்சி 11ம், 12ம் திகதி ஆகிய மூன்று தினங்கள் நடைபெறும். 10ம் திகதி காலை 9மணி முதல் 1மணி வரை, கல்வி இலாகா அதிகாரிகள், மேற்படி காட்சிப் பொருட்களை மதிப்பீடு செய்வார்கள். பி. ப. 2மணி முதல் கைதடி, உசன், சாவகச்சேரி வலயப் பாடசாலைகளைப் பார்வைக்கு அனுமதிக்கப்படும். சாவகச்சேரி இந்துக் கல்லூரியை மட்டும் மறுநாளே அனுமதிக்கப்படும்.

11ம்திகதி மட்டுவில், வரணி, கொடிகாமம் வலயப் பாடசாலைகளும் 12ம் திகதி மாணவர் அனுமதிக்கப்படமாட்டார்கள். பெற்றோர் மட்டுமே அனுமதிக்கப்படுவர். 12ம்திகதி பி. ப. 2 மணிக்கு பெற்றோருக்கு கலைநிகழ்ச்சிகளும் காண்பிப்பதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

முதலாம் ஆண்டு முதல் 6ம் ஆண்டு வரை ஒரு ரூபாவும், 7ம் ஆண்டு முதல் 13ம் ஆண்டு வரை 2 ரூபாவும், பெற்றோரிடம் 3ரூபாவும் நுழைவு கட்டணமாகப் பெறப்படவுள்ளதாகவும் கூறப்படுகிறது.

**வியாபாரம்பெருக விளம்பரம் செய்க**


## 1ம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 5-6-1920

மறைவு: 18-7-1985

திதி: 6-8-1986

சங்கத்தானையை பிறப்பிடமாய்க் கொண்ட

### வைரமுத்து சின்னத்துரை

(தம்பிஐயா)

(இளைப்பாறிய ஆசிரியர்)

அன்பின் திருவுருவாய் பண்பின் சிகரமாய் பாசத்தின் பிறப்பிடமாய் வாழ்வின் வழிகாட்டியாய் குடும்பத்தின் ஒளி விளக்காய் அணையாத தீபமாய், எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டுப் மின்னலென அணைந்துவிட்ட எங்கள் தெய்வமே, நீங்கள் எம்மைவிட்டு பிரிந்து ஓர் ஆண்டு சென்றும் உங்கள் நினைவு எம்மை விட்டுப் பிரியாது உங்கள் ஆத்மா சாந்தி அடைய மீனாட்சி அம்மனைப் பிரார்த்திக்கிறோம். அன்னாரது இல்லத்தில் நடைபெறும் ஆண்டுத் திவசத்தில் பங்குபற்றுமாறு உற்றார், உறவினர், நண்பர்களை கேட்டுக்கொள்கிறோம்.

'சிவபதி'
மீனாட்சி அம்மன்
கோவிலடி,
சங்கத்தானை.

உங்கள் பிரிவால் துயருறும்
அன்பு மனைவி
பகிரதி,
மக்கள், மருமக்கள்.

B/1443

ஈழமுரசு

6-8-86


கப்பன் விழா அரங்கில் சொக்கன் பேச்சு:

# மறைந்திருந்துமுதன்முதலாககண்ணிவெடி தாக்குதல் நடத்தியவன் இராமனே தான்!

(அரியாலை)

"அழியாத அழகுள்ளவன் இராமன். கம்பனுக்கே கிஷ்கிந்தா காண்டம் ஒரு கண்டமாக அமைந்துவிட்டது. வாலிவதையின் பின்னர் கம்பரில் கூட மாற்றம் உண்டானது. கம்பன் ஒரு சிறந்த காப்பியக் கலைஞன். கவி நயம் உள்ள பாடல்களைப் பாடக் கூடியவன். வாலிவதம், இராவணவதம் நடைபெற்றபோது இராமனின் நெஞ்சில் சீதை இல்லாமல், அசோக வனத்தில் இருந்தாள். கணவனுக்கு வரும் ஆத்திரத்தை அடக்கத்தான், மனைவி, கணவன் நெஞ்சில் இருக்க வேண்டும்."

இவ்வாறு பேராசிரியர் அ. சண்முகதாஸ் அகில இலங்கைக் கம்பன் கழகத்தின், மூன்றும் நாள் கம்பன் விழா நிகழ்ச்சியில, கிஷ்கிந்தா காண்ட ஆய்வில்- "ஒரு பாடல்" என்னும் பொருள் பற்றிக் கருத்துரை வழங்குகையில் குறிப்பிட்டார். இவ்விழா நாவலர் கலாச்சார மண்டபத்தில் திரு. ஆர். டி. சுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்றது. ஆய்வு கருத்தரங்கு திரு. க. சிவராமலிங்கம் தலைமையில் நடைபெற்றது திரு எஸ். இராகவன் மங்கள விளக்கேற்றினார். திரு. இ. ஜெயராஜ் வரவேற்புரை நிகழ்த்தினார்.

விழாத் தலைவர் திரு. டி. சுப்பிரமணியம் தலைமை உரையில் "மூன்று தசாப்தங்களுக்கு முனபு யாழ்ப்பாணத்தில் கந்தபுராணம் போல், இராமாயணம் சக்கை போட்டது இராவணன் என்றல் குறைந்தவனாகத்தான் நினைக்கிறோம். அவன் சுத்த பிராமணன், சிறந்த இசை வல்லுனன், சிவபக்தன் ஆவான். நாயன்மார்கள் கூட அவனைப் பற்றிப் பாடி உள்ளார்கள். இலங்கை முழுவதும் சிவபூமியாகும். இராவணனின் தாய் தூவிய மண் தான் இங்கு உள்ளது. "கிராக்கி" பணணி இளைஞர்கள் திருமணம் செய்யக் கூடாது. இது தமிழ்ப் பண்பாட்டுக்கு ஒவ்வாது என்றார்.

வித்துவான் க. சொக்கலிங்கம் (சொக்கன்) ஒரு காண்டம் என்னும் பொருள் பற்றிக் கருத்துரை வழங்குகையில் குறிப்பிட்டதாவது:-

"முதலாவது கண்ணி வெடி வைத்தவன் இராமன்தான். மறைந்திருந்து வாலி மீது அம்பு விட்டான். இராமாயணத்தை கம்பர் இதிகாசமாக ஆக்கியதுதான், அது பெரிய அந்தஸ்த்தைப் பெறக் காரணமாகும். உண்மையான தெய்வ பிரபாவங்களை எடுத்துக் கூறுவதுதான் கம்பனின் உண்மையான நோக்கம் ஆகும். ஒவ்வொரு காண்டமும் தனித்துவம் பொருந்தியதாக அமைந்தாலும் கம்பனுக்குச் சோதனைக் களமாக அமைந்தது கிஷ்கிந்தா காண்டம் ஆகும். இராமாயணத்தில் உள்ள ஆறு காண்டங்களிலும் இழப்புக்கள் நேர்ந்துள்ளன. இழப்பில்வரும் வெற்றியைக் கண்டங்கள் கூறுகின்றன. தசரதனின் இழப்புக் கூட இராமனின் இறுதி வெற்றிக்கு அறிகுறியாக உள்ளது. இழப்பின் பின் ஏற்படும் சோகத்தில் இருந்து புதிய வாழ்க்கை உருப்பெறுகிறதை இராமாயணம் கூறுகிறது என்றார்.

கம்பன் கழக அமைப்பாளர் திரு. இ. ஜெயராஜ் "ஒரு படலம்" என்னும் பொருள் பற்றிக் கருத்துரை வழங்குகையில் குறிபபிட்டதாவது:-

மிகச் சுவையான படலமாக வாலிவதைப்படலம் அமைந்தாலும், கம்பனுக்கு கஷ்டம் ஏற்படுத்தியது அதுதான். வானுறையும் தெய்வத்துள் வாழ்ந்த இராமனை வையத்தில் கொணர்ந்து கம்பன் புரட்சி செய்தான். அன்புள்ளவர்களுக்காக அறத்தை வெட்டி, வெட்டிஇறுதியில் உள்ளாடையுடன் நிற்பதுபோல கிஷ்கிந்தா காண்டத்தில் இராமன் நிற்கிறான். எந்த ஒரு உயர்ந்தவரும் ஏதோ ஒரு பிழையைச் செய்துதான் இருப்பான். இராமனும் குற்றம் செய்தவன் என்பதனை மக்களுக்கு எடுத்துக் காட்டக் குற்றத்தை ஏற்படுத்தியவன் கம்பன் பிழை விட்டாலும் நிமிரலாம் என்பதனை வாலிவதைப் படலம் கூறுகிறது. பலங்கூடிய எதிரியைப், பலங் குறைந்தவன் தாக்க வேண்டிய சூழ்நிலையில் ஏற்பட்டது தான் "கெரில்லாப் போர்" என்றார்,

வித்துவான் திருமதி வசந்தா வைத்திய நாதன் "ஒரு பாத்திரம்' என்னும் பொருள் பற்றிக் கருத்துரை வழங்குகையில் 'உலகிற்கு நாகரிகத்தைச் சொல்ல வந்த பண்பாட்டுக் காவியம்இராமாயணம் ஆகும். இராமாயணத்தில் தெய்வம் மானுடனாக இறங்கி வந்துள்ளது கம்பன் பாத்திறத்தால் பாத்திரங்களைப் படைத்துள்ளான். தொட்ட இடத்தில் எல்லாம் இராமாயணம் மணங் கமழும் நாலு வேதத்தின் வேலியான வாலி, மானுடம் வாழ்வதற்காகப் படைக்கப்பட்ட பாத்திரம் ஆகும். வாலியின் வாலில் மிகப் பெரிய பலம் உண்டு. கர்ணன் வதை வாலி வதை ஆகியவற்றிற்குச் சமாதானம் சொல்லலாம். ஆனல் சரியான காரணங்கள் சொல்ல முடியாது- வாலி என்ற பாத்திரம் படைக்கப்படாவிட்டால் இராமாயண காவியம் முற்றுப் பெற்றிருக்க முடியாது" என்றார்

## பாதை திருத்தம்

(அராலி)

மிக நீண்ட காலமாக திருத்தப்படாமல் பாதிப்படைந்திருந்த தீவுப்பகுதி மக்களின் தற்போதையபிரதானபோக்குவரத்துப் பாதையான அராலித் துறைமுகம் திருத்தம் செய்யப்பட்டு விஸ்தரிக்கப்பட்டு வருகிறது.

ஈழத்துத் தமிழ் மக்களின்!
அரசியல் உணர்வை
அரங்கிற்குக் கொண்டு வருவது

செய்திக்கதிர்
இருவார செய்தி விமர்சனத் தொகுப்பு

1-8-86 இதழில் விலை ரூபா 2.25

1919 முதல் மதிப்பில்லாத
சிங்கள தமிழ் ஒப்பந்தங்கள்

ஒப்பந்தங்களா? இவை தமிழரைச் சுட்டெரிக்கும்
தீப்பந்தங்களா?

கூட்டணி பற்றி குமார் விமர்சனம்
மாகாணசபைகள் இனப் பிரச்சினையைத்
தீர்க்கும் மருந்தா?
விடை காணப் படியுங்கள்!

# 'கல்வியால் மட்டும் ஒருவனை நற்பிரஜையாக்க முடியாது'

(வல்வெட்டித்துறை)

"எதிர்காலத்தின் புதிய உலகை ஆளப் போகும் சந்ததியை உருவாக்க வேண்டியவர்கள் என்ற வகையில் ஆசிரியர்களும் பெற்றோர்களும் ஒரு முக்கிய பங்காளிகளாக இருக்கிறார்கள் என்பதை மறந்து விடுதல் கூடாது. ஒரு மாணவனின் கல்வியை மட்டும் கவனத்தில் எடுத்துக் கொள்வதன் மூலம் அவனை ஒரு சிறந்த பிரஜையாக உருவாக்க முடியாது. ஒரு பிள்ளையின் வாழ்வில் நிகழும் ஒவ்வொரு நிகழ்வுகளுக்கும் நாமே காரணம். அவனது உள ஆற்றல் விருத்தியடைய வேண்டுமானல் கல்வியுடன், ஒழுக்கமும் சேர்ந்து பேணப்பட வேண்டும். இன்றைய இந்தக் கலந்துரையாடல் எதிர்காலத்தில் பாடசாலைக்கும் சமூகச் சூழலுக்கும் ஒரு பாலமாக அமையும். இதன் மூலம் பெற்றோரும் பங்காளிகளாக மாறும் சந்தர்ப்பங்கள் ஏற்படுவதால் இது போன்ற சந்திப்புக்கள் ஒவ்வொரு பாடசாலையிலும் ஏற்படுத்தப் படுதல் அவசியமாகும்."

இவ்வாறு பருத்தித்துறை சித்திவிநாயகர் மகா வித்தியாலயத்தில் அண்மையில் நடைபெற்ற பெற்றோர் ஆசிரியர் கலந்துரையாடலை ஆரம்பித்து வைத்துப் பேசிய, பாடசாலையின் அதிபர் திரு. ந. அனந்தராஜ் குறிப்பிட்டார்கள்.

மேற்படி கலந்துரையாடலில் பத்தாம், பதினோராம், ஆறும் ஆண்டுகளில் பயிலும் மாணவர்களின் பெற்றோர்களும் மேற்படி வகுப்புகளில் கற்பிக்கும் ஆசிரியர்களும், பாடசாலை அபிவிருத்திச் சபை செயலாளர் திரு ந. சிவசுப்பிரமணியம் ஆகியோரும் பங்கு பற்றினர்.

பெற்றோர்களின் பல ஆக்கபூர்வமான கருத்துகளின் பின்னர் செயலாளர் திரு ந. சிவசுப்பிரமணியம் தனது நன்றியுரையில் பாடசாலையின் வளர்ச்சிக்கு தமது பங்களிப்பை இதயசுத்தியுடன் வழங்கிக் கொண்டிருக்கும் ஆசிரியர்களுக்கும், அதிபருக்கும் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் சார்பில் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொண்டார்.

கிளிநொச்சி கல்விப் பணிப்பாளர் பேச்சு:

# விவசாயிகளின் பிள்ளைகள் நல்ல கல்வி பெற வேண்டும்

(பரந்தன்)

'பின்தங்கிய மாவட்டமான கிளிநொச்சி மாவட்டத்தின் கல்வி சிறக்க அயராது உழைந்து வருகின்றோம். கிளிநொச்சி தனிமாவட்டமாகிய போது இங்கு 313 ஆசிரியர்களே கடமை புரிந்து வந்தனர் தற்போது இம் மாவட்டத்தில் 726 ஆசிரியர்கள் பணி புரிந்து வருகின்றனர். இவர்களில் 250 பேர் பட்டதாரி ஆசிரியர்கள் என்பதும் குறிப்பிடத் தக்கது.'

முரசுமோட்டை முருகானந்தா மகாவித்தியாலயப் பரிசளிப்பு விழா கடந்த புதன் கிழமை வித்தியாலய மைதானத்தில் இடம்பெற்றது. இவ் வைபவத்தில் முதன்மை விருந்தினராக் கலந்து கொண்ட கிளிநொச்சி முல்லைத்தீவு மாவட்டங்களின் கல்விப்பணிப்பாளர் ஜனாப் எம். எம் மன்சூர் மேற்கண்டவாறு கூறினார்.

வித்தியாலய முதல்வர் திரு. சி. துரைராசா தலைமையில் இடம் பெற்ற இவ் வைபவத்தில் பரந்தன் வட்டாரக் கல்வி அதிகாரி நா. தணிகாசலம்பிள்ளை, அயற்பாடசாலை அதிபர்கள் உட்பட பலரும் பங்கு கொண்டனர். வித்தியாலயத்தில் இடம்பெற்ற பல போட்டிகளிலும் முதன்மை பெற்ற பல மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டன. நவஜீவனம் திருமதி அருள் தம்பிராசா அவர்கள் பரிசில்களை வழங்கினார்.

இவ் வைபவத்தில் ஜனாப் மன்சூர் தொடர்ந்து பேசுகையில்,

பாடசாலைகளில் பல வைபவங்கள் இடம் பெறுகின்றன. எனினும் பெற்றோரும் மாணவரும் ஆவலுடன் எதிர்பார்க்கும் வைபவம் பரிசளிப்பு விழா ஒன்றுதான். கிளிநொச்சி மாவட்டத்தில் அநேகர் விவசாயிகள். தற்கால சூழ் நிலையில் விவசாயிகள் பல நட்டங்களை அடைகின்றனர். விவசாயிகளின் பிள்ளைகள் அனைவரும் சிறந்த கல்வியைப் பெறவேண்டும். கல்விதான் அழியாத செல்வம்.

மாணவர்களாகிய நீங்கள் சீருடையோடு பாடசாலை வருகின்றீர்கள். சிறந்த சிந்தனையோடு வீடு செல்ல வேண்டும். அதுவே எமது விருப்பம்" இவ்வாறு கூறினார்.

# 'சேவை மனப்பான்மையுடன் செயலாற்ற வேண்டும்'

(சரசாலை)

"சனசமூக நிலையங்கள் பல்வேறு வகையான தேவைகளையும் மக்களுக்கு நிறைவேற்ற வேண்டும். இச்சனசமூகநிலைய ஒன்றியத்திற்குட்பட்ட சனசமூக நிலையங்கள் தமது பகுதி மக்கள் தேவைகளை உணர்ந்து அதனை நிறைவேற்றவேண்டும். அதற்கு மேற்படி சனசமூக நிலையங்களில் பதவிகளை வகிப்போர் சேவை மனப்பான்மையுடன் செயல்படவேண்டும்."

இவ்வாறு யாழ். மாவட்ட அபிவிருத்திச்சபை வரணி உப அலுவலக வரணி எல்லைக்குட்பட்ட சனசமூக நிலைய ஒன்றியக் கூட்டத்திற்குத் தலைமை தாங்கி உரையாற்றிய சனசமூகநிலைய அபிவிருத்தி உத்தியோகத்கர் திரு செ. தவநாயகம் றிப்பிட்டார்.

அபிவிருத்திச்சபை உப அலுவலக வரணி அலுவலகத்தில் மேற்படி கூட்டம் இடம்பெற்றது. வரணிக் கிராமசபைப் பகுதி உட்பட்ட சனசமூக நிலைய நிர்வாகத்தினர் பலர் கலந்துகொண்டனர்.

மேற்படி ஒன்றிய நிர்வாகிகளாகத் தலைவர் திரு. த. பாலசண்முகநாதன், உபதலைவர் திரு. நா. கந்தப்பு, செயலாளர் திரு. சு. ஆறுமுகம், பொருளாளர் திரு. எஸ். பொன்னையா தெரிவாகினர். நிர்வாகசபையும் தெரிவாகியது.

## ஆரம்ப கூட்டம்

சாவகச்சேரி நோயாளர் நலன் புரிச்சங்க ஆரம்பக்கூட்டம் ஒன்பதாம் திகதி சனிக்கிழமை மாலை 3.30 மணிக்கு சாவகச்சேரி டிறிபேர்க்கல்லூரி மண்டபத்தில் நடைபெறும். சாவகச்சேரி மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் கே.சோமசுந்தரம் தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்தில் இதுசம்பந்தமாக அக்கறையுள்ள அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அமைப்புக்குழு கேட்டுள்ளது.

உதய சிந்தனை

தவறு செய்வது என்பது துரதிர்ஷ்டவசமான விஷயம். இரக்கப்படவேண்டிய விஷயம். ஆனால் இது தான் உண்மை என்று தெரிந்து கொண்ட பிறகும் தவறு செய்வது பெரும் குற்றம்; உலகமே சேர்ந்து கண்டிக்கிற குற்றம்.

—மாஜினி.

140, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் தொலைபேசி: 22437

இதய ஒலி

6-8-86 புதன்கிழமை (அக்ஷய) ஆடி 21

# தமிழ் பத்திரிகையாளன் கந்தசாமியின் நிலை!

இலங்கையின் தமிழ்ப் பத்திரிகையாளர்களில் ஒருவரான திரு. கந்தசாமி, ஸ்ரீலங்கா ஜனநாயக சோஷலிஸக் குடியரசின் இராணுவப் படையினரால் தடுத்து வைக்கப்பட்டு ஐம்பது நாட்களுக்கு மேலாகிவிட்டது என்ற செய்தி தரும் வேதனையை இங்கு பதியவைக்க விரும்புகின்றோம்.

இராணுவப் படையினரின் கண்களுக்கு தமிழ்ப் பயங்கரவாதியாகக் காணப்படும் கந்தசாமி, எதற்காகத் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்?

திரு. கந்தசாமி கடமை புரியும் 'ஈழநாடு' நிறுவனத்துக்கு கூட இது பற்றிச் சரியாக அறிவிக்கப்படவில்லை.

திரு. கந்தசாமியின் மனைவிக்கு, பெற்றோருக்கு, சகோதரர்களுக்கு இது பற்றி உத்தியோகபூர்வமாக எந்தத் தகவலும் அனுப்பப்படவில்லை.

வருடக் கணக்கில் நடைமுறையிலிருக்கும் அவசர காலச் சட்டமும் தமிழர்க்கெனவே அமுல் செய்யப்படும் 'பயங்கரவாத தடைச்சட்டமும் செயற்படும் வரை யாருக்கும், எதனையும் அறிவிக்கவேண்டிய கட்டாயம் இந்நாட்டு அரசாங்கத்துக்கு இல்லை.

ஆனாலும் பத்திரிகையாளரான கந்தசாமி பயங்கரவாதியாக ராணுவத்தினரின் பார்வைக்குத் தெரிவதற்குக் காரணம் ஏதாவது இருக்க வேண்டுமே!

திரு. கந்தசாமி 'ஈழநாடு' பத்திரிகையின் கொழும்பு அலுவலகத்தின் நிருபர். அவர் வெறுமனே நிருபராக மட்டும் கடமையாற்றவில்லை.

யாழ்ப்பாணத்துக்கும் கொழும்புக்குமிடையே தபாற் போக்குவரத்துத் தாமதம், தொலைபேசிச் சீர்கேடு போன்றவைகள் இருந்தமையால் வேறுபல இன்னோரன்ன கடமைகளையும் அவர் கவனிக்க நேர்ந்தது.

கொழும்புக்கு வரும் வெளிநாட்டுப் பத்திரிகைகள், சஞ்சிகைகள், தபால்களைச் சேகரித்து தனியார் பஸ்களில் கொடுத்துவருவதும் கந்தசாமியின் தினசரிபணிகளில் ஒன்றானது.

இவ்வாறு கொடுத்துவிடப்பட்ட பார்ஸல் ஒன்று சம்பந்தமாகவே கந்தசாமி இப்போது 'உள்ளே' இருக்கிறார்.

பார்ஸலுக்குள்ளிருந்த அச்சடித்த பத்திரிகைகள், சஞ்சிகைகள் "பயங்கரவாத பிரசுரங்கள்" என்று படையினர் பூச்சாண்டி காட்டி அவரை உள்ளே வைத்திருக்கின்றனர்.

கடந்த மே மாதம் 13ம் திகதி குறிப்பிட்ட பார்ஸலுடன் சம்பந்தப்பட்ட பஸ் அனுராதபுரத்தில் தடுத்து நிறுத்தப்பட்டது.

மறுநாள் பொலிஸாரின் அழைப்பின் பேரில் கந்தசாமி விசாரணைக்காக வெள்ளவத்தைப்பொலிஸ் நிலையத்துக்குநேரடியாக சமூகம் கொடுத்திருந்தார்.

பார்ஸலுக்குள் பயங்கரவாத பிரசுரங்களை வைத்து அனுப்பியிருந்தால் பொலிஸார் அழைத்தபோது கந்தசாமி தலை மறைவாகித் தப்பி ஓடியிருக்கலாம்.

ஆனால் தவறெதுவும் செய்யாததால் பொலிஸார் அழைத்தபோது, அச்சமெதுவுமின்றி கந்தசாமி அங்கு சென்றுள்ளார் என்பதை நாம் கவனிக்க வேண்டும்.

கொழும்பிலிருந்து ஹெலிகப்டரில் மே மாதம் 14ம் திகதி அனுராதபுர முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்ட கந்தசாமி இன்றுவரை விடுவிக்கப்படவில்லை.

இந்நாட்டில் பேச்சுச் சுதந்திரம், எழுத்துச் சுதந்திரம், பத்திரிகைச் சுதந்திரம் எல்லாம் இருப்பதாகச் சொல்கிறார்கள்.

பத்திரிகைத் தணிக்கை கூட இல்லை என்கிறார்கள்.

ஆனால் பிரசுரங்கள், பத்திரிகைகள், சஞ்சிகைகளை பார்ஸல் பண்ணும சுதந்திரம், பஸ்களில் ஏற்றிச் செல்லும் சுதந்திரம் மட்டும் தடைசெய்யப்பட்டுள்ளது போலும்!

கந்தசாமி மட்டுமல்ல, அவரது பார்ஸலை ஏற்றிச் சென்ற தனியார் பஸ் சாரதி, அதன் ஊழியர் ஆகியோரும் ராணுவ முகாமில் 'வாசம்' செய்கின்றனர்.

பாவம் கந்தசாமி!

இவர் செய்த முதல்குற்றம் பத்திரிகையாளனுகத் தொழில் புரிந்தது.

இரண்டாவது குற்றம் தமிழ்ப் பத்திரிகையாளனுக இருந்தது.

யாராவது ஒரு சிங்கள பத்திரிகையாளன் இவ்வாறு கைதாகியிருந்தால் குரல கொடுக்க, போராட்டம் நடத்த, ரகளை உண்டு பண்ண எத்தனையோ பேர் முன்வந்திருப்பார்கள்.

உழைக்கும் பத்திரிகையாளர் சங்கம், தேசிய பத்திரிகையாளர் சங்கம் என்று இருப்பவர்களுக்கெல்லாம் கந்தசாமி கைதானது தெரியாதா?

இன்று கந்தசாமிக்கு நடப்பதுதான், நாளை ஒவ்வொரு தமிழ் பத்திரிகையாளனுக்கும் நடக்கலாம்.

இதனை இப்போதாவது உணர்ந்து உரிய நடவடிக்கை எடுக்க

★ நேற்றைய கட்டுரையின் இறுதிப் பகுதி. 'புரண்ட்லைனில்' வெளியானது.

# பிரமாண்ட ஜனரஞ்சகத்தில் திளைத்து நிற்கிறார் எம்.ஜி.ஆர்; ஜெயலலிதாவுக்கு புதிய பதவி?

"செங்கோல் வழங்குனர் பங்கு ஒருபுறம் இருக்க, அண்ணு தி. மு. கட்சிக்கு ஜெயலலிதா ஆற்றிய ஒப்பற்ற சேவையைப் பகிரங்கமாக எம். ஜி. ஆர். பாராட்டியமை பரவலான ஓர் ஊகத்திற்கு வித்திட்டது. ஆர்வலர் மன்றத்தின் தலைவர் பதவிக்கு விரைவில் ஜெயலலிதா ஒருவேளை நியமனமாவாரா? தற்போது அப்பதவி வகிப்பவர் முசிறிப்புத்தன். அவருக்கு 'ஓய்வு' அளிப்பது நலம்பயக்கும் என இராமச்சந்திரன் மன்ற மாநாட்டின் போது 'சாடைமாடையாக'க் குறிப்பிட்டிருந்தார். அதுவும் இந்த அனுமானத்திற்கு வலுவூட்டியது.

ஐந்து இலட்சம் உறுப்பினர்களைக் கொண்டு தமிழ்நாடு மாநில தொலைதூரத்து மூலை முடுக்குகளிற்கூட வியாபித்து, இலங்கை, மலேசியா, சிங்கப்



பூர், ஹொங்கொங் முதலாம் கடல் கடந்த நாடுகளிலும் கிளைகளை உடைய எம். ஜி. ஆர். ரசிகர் மன்றம் 'அகில இந்திய அண்ணு திராவிட முன்னேற்றக் கழகத்தின் முதுகெலும்பு' என வர்ணிக்கப்பட்டுள்ளது. முசிறிப்புத்தன் தமது தற்போதைய மன்றத் தலைவர் பதவியினின்றும் கீழிறங்குவாரானல், இந்த அதிமுக்கிய தாபனம் எம். ஜி. ஆரின் நம்பிக்கைக்குப் பாத்திரமான 'வலதுகரங்க'ளில் ஒன்றின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்குவதைத்தான் எம். ஜி. ஆர். மிக விரும்புவார். இது இயல்பே என்று ஜெயலலிதா ஆதரவாளர்களின் வாத நிலைப்பாடு.

அப்படியாயின், முசிறிப்புத்தானுக்குக் கிடைக்கும் சன்மானம், வெகுமதிதான் யாது? அவருடைய ஒழுங்கமைக்கும் ஆற்றலை முதலமைச்சர் எம். ஜி. ஆர். தாமாகவே மன்றத்தின் இம்மதுரை மாநாட்டின்கண் புகழ்ந்துள்ளாரே! ஜெயலலிதா வெறுப்பாளர்களின் முன்னணியில் ஒருவராக முசிறிப்புத்தன் இருந்தது வெகு நாட்களுக்கு முன்பல்ல. ஆனல் அந்த நாட்கள் 'மலையேறி விட்டன.' இப்போதெல்லாம் அவர் அப்படியானவரல்ல; இனிமேலும்தான்!

எம். ஜி. ஆர் ஆர்வலர், ஆதரவாளர்கள் மன்றத்தின் மதுரை மாநாட்டில் பூசல் மறைந்துதோழமைநிலவுவதை அவதானித்து இருக்கலாம். மன்றத்தின் கிளைகள் தம்முட் பூசல் பிணக்குகளில் அடிக்கடி ஈடுபட்டு, ஒன்றன்மீதொன்று வாதத் தாக்குதலும் மேற்கொண்டது உண்டு. ஆனாலும், மதுரை மாநாட்டிலோ, அவை ஒன்றோடொன்று தோழமை பூண்டு பழகின.

இத்தோழமை, அனைத்து இந்திய அண்ணு திராவிட முன்னேற்றக் கழகத்தில் எம். ஜி. இராமச்சந்திரனின் பிடி பலம் வாய்ந்தது என்பதற்குச் சான்றாகும். மேலும், பிணக்குப் பூசல் வளர்த்து, தத்தமது வழியே பிரிந்து செல்ல முனையும் கழகக் கிளைகளை ('ஷொக் ட்ரீற்மென்ற்') அதிர்ச்சிச் சிகிச்சை மூலம் ஒருங்கு இணைத்து வைத்து நடத்தும் சக்தி எம். ஜி. ஆரிடம் உண்டு என்பதையும் அத்தோழமை நிரூபிக்கிறது. தமிழ்நாடு மாநில அமைச்சரவையில் முதலமைச்சர் இராமச்சந்திரனுக்கு அடுத்த படியாக இரண்டாம் இடம் வகிப்பவர் வீ. ஆர். நெடுஞ்செழியன். கழக மத்தியில் 'அக்கப்போரில்' கழகத்தவர்கள் ஈடுபடலாகாது என எச்சரிக்கை விடுத்தல் அவசியம் எனக் கருதியே, மாநாட்டு மேடையிலிருந்து அவ்வாறு செய்தும் விட்டார்.

'கசந்த, கடந்தகால உணர்வுகளை மறந்து விடுங்கள்; உங்கள் மத்தியில், எமது கழக மத்தியில், எவ்விதக் கருத்து மோதல்கள் முன்பு ஏற்பட்டு இருந்தாலும், கழகப் பொது நலம் கருதி, அவற்றைப் பொருட்படுத்தாதீர்கள்; தலைவர் எம். ஜி. ஆருக்குப் பக்கபலமாக நில்லுங்கள்!' என அவையினர் அனைவருக்கும் உருக்கமான வேண்டுகோள் விடுத்தார். இவ்வேண்டுகோள், கொள்கை பரப்புச் செயலாளர், ஜெயலலிதாவின் 'இமேஜ்'ஜுக்கு மேலும் மெருகூட்டியது போலத் தோன்றிற்று. கழகத்தின் சில தலைவர்களால் இதே செயலர் தான், எம். ஜி. ஆர். சுகவீனமாக இருக்கையில், ஒருபுறம் ஒதுக்கப்பட்டு, ஏளனம் செய்யப்பட்டிருந்தவர் ஆவர்.

இன்னுமொரு காரணத்தை முன்னிடும் மதுரை 'மன்ற' மாநாடு குறிப்பிடத்தகு முக்கியத்துவம் உடையது எனக் கணிக்கப்பட வேண்டியிருக்கிறது. எம். ஜி. ஆ. ரின் உடலில் பேச்சு உறுப்புகளின் இயக்கத்தில் உற்ற பழுதின் பின்னர், மதுரை மாநாட்டின்போதுதான் அவர் முதன்முதலாக ஒரு நீண்ட சொற்பொழிவு ஆற்றினர். அதற்கென விசேடமாக அமைக்கப்பெற்ற மேடையினின்றும் அவர் முப்பது நிமிடங்களாக உரையாற்றினர். அத்தருணம் அவர் வாய்மொழிந்தவற்றைப் புரிந்து கொள்வது சிரமமாக இருந்தது. ஆயினும், அங்கு திரண்டிருந்த ஜன சமுத்திரம் சொற்பொழிவைச் செவிமடுத்து, கணத்திற்குக் கணம் மெய்மறந்து பரவசத்தில் ஆழ்ந்தது.

1986, ஜூலை நடுப்பகுதியில், எம். ஜி. ஆர். ரசிகர் மன்றத்தின் மதுரை மாநாடு நடந்தேறியது. அதற்குச் சில வாரங்களுக்கு முன்னர் சென்னையில் எம். ஜி. ஆர். ஒரு பிரேரணையைக் கொணர்ந்திருந்தார். அ. தி. மு. கழகப் பணிக்கெனப் பதினெரு அமைச்சர்களைச் சேர்த்துக் கொள்வது என்பதே அப்பிரேரணை. மதுரை மாநாட்டின்போது எம். ஜி. ஆர். அதனையிட்டு ஒரு பிரகடனம் விடுப்பார் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனல் எதிர்பார்ப்பு நிறைவேறவில்லை. திரும்பத் திரும்ப அந்தக் கருமத்தைப் பிரஸ்தாபித்த பத்திரிகையாளர்களுக்கும் அவர் எதனையும் வெளியிட மறுத்துவிட்டார்.

தமிழ் நாடு மாநில அமைச்சரவை- மாற்றங்களை அதுவரை இரண்டு மாதங்களாக எதிர்நோக்கி இருந்த கழகத்தவர்களுக்குப் போலவே, பொது மக்களுக்கும், எம். ஜி. ஆரின் இந்த மௌனம் பெரும்ஏமாற்றத்தை அளித்தது.

மன்றம் 1986, ஜூலை நடுக்கூற்றில் மதுரையில் நடத்திய மாநாடு, எம். ஜி. ஆர். எத்துணை பிரமாண்டமான ஜனரஞ்சகத்தில் திளைத்து இருக்கிறார் என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டு ஆகும். அப்பேராதரவு



முதலமைச்சர் எம். ஜி. இராமச்சந்திரன் செயற்பட்டுவரும் பாணியில் ஏதாவது தாக்கம் விளைக்குமா? அதனைப் பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.

சி. ராகவன் (சென்னையில்)
எஸ். வீ. பாலசுப்பிரமணியன் (மதுரையில்)

## 'ஆங்கிலத்தின் முக்கியத்துவம்'

தமிழ் ஆங்கில மொழிகள் பாடசாலைகளில் நடப்பது நன்மைதருகின்றன. தமிழ் மொழிக்கு முக்கியத்துவம் கொடுக்கும் நாங்கள் ஆங்கில மொழிக்கும் முக்கியத்துவம் கொடுக்க வேண்டியது அவசியமாகும். பல மொழி அறிவு ஒருவருக்கு அறிவுத் துறையில் நல்ல அபிவிருத்தியைக் கொடுக்கும்"

உரும்பராய் சைவத் தமிழ் வித்தியாசாலையில் இடம் பெற்ற தமிழ், ஆங்கிலமொழித்தின விழாவில் பிரதமவிருந்தினராக பங்கு கொண்ட யாழ். மத்தியகல்லூரி முன்னை நாள் அதிபர் திரு. எஸ். என். இரத்தினசிங்கம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அதிபர் திரு கா. அரியநாயகம் தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் பிரதி அதிபர் பஞ்சாட்சரம் வரவேற்புரை நிகழ்த்தினர்.

தேர்வு பெற்ற மாணவர்களுக்கு உரும்பராய் இந்துக் கல்லூரியின் முன்னை நாள் சிரேஷ்ட ஆசிரியை திருமதி தவமணி இரத்தினசிங்கம் பரிசுகளை வழங்கினர். ஈற்றில் மாணவர்களின் கலைநிகழ்ச்சிகளும் இடம் பெற்றன.

# சின்னஞ்சிறு செய்திகள்

## ஆசிரியர் தவிப்பு

(நெடுந்தீவு)

கடந்த மாதம் 20ந் திகதி ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்ட ஆடி மாதச் சம்பளக் காசோலைகளை இன்றுவரை மாற்ற முடியாமற் பல ஆசிரியர்கள் அவதியுறுகின்றனர். நெடுந்தீவு கிராமிய வங்கி காசோலையை மாற்றுவதில் இதுவரை கடைப்பிடித்து வந்த ஒழுங்கு முறையில் மாற்றம் மேற்கொண்டமையே இவ்வாறு ஆசிரியர்கள் காசோலையை மாற்ற முடியாமற் போனமைக்கான காரணம் எனத் தெரியவருகிறது. ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் காசோலையில் வழமை போல் அவர்களின் பெயர்கள் மாத்திரமன்றி, நெடுந்தீவுப் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிராமிய வங்கி, என்று குறிப்பிடுவதுடன் காசோலையின் உரித்தாளரின் கிராமிய வங்கிக் கணக்கு இலக்கமும் குறிப்பிடப்பட வேண்டும் எனக் கேட்கப்படுகின்றது. இந்தத் திடீர் மாற்று ஏற்பாடே ஆசிரியர்கள் காசோலையை மாற்றுவதில் சிரமத்தை ஏற்படுத்தியுள்ளது

## தரமுயர்வு

(பரந்தன்)

பரந்தன் இந்து தமிழ் வித்தியாலயம் கடந்த மாதம் முதல் மகாவித்தியாலயமாகத் தரமுயர்த்தப்பட்டுள்ளது. இத்துடன் இவ்வாண்டு முதல் க. பொ. த. உயர்தர (கலை)வகுப்பு நடாத்தவும் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

பாடசாலையைத் தரமுயர்த்துவதற்கு அயராது முயற்சி செய்து வந்த கிளிநொச்சி மாவட்ட கல்விப் பணிப்பாளர் ஜனாப் எம். எம் மன்சூருக்கு பரந்தன் இந்து மகாவித்தியாலய அபிவிருத்திச் சபை நன்றியையும் பாராட்டையும் தெரிவித்துள்ளது.

## தனியார் கடைகளில் இப்பத்திரங்கள்

(வேலணை)

வேலணை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் அச்சடிக்கப்பட்ட சில விண்ணப்பப் பத்திரங்கள் தனியார் கடைகளில் பொருட்கள் சுற்றிக் கொடுப்பதற்கு உபயோகிக்கப்பட்டு வருகின்றது. வருடாந்த சம்பள உயர்வுக்கான (இரகசியமானது) என்னும் பத்திரம் கூட இப்படியாகப் பொருட்கள் சுற்றிக் கொடுக்கப்பட்டு வருகின்றது. தனியார் கடைக்கு இந்தவிண்ணப்பப்பத்திரங்கள் எப்படிப் போகின்றன எனக் கேள்வி எழுப்பப்படுகின்றது. இதுசம்பந்தமாகச் சங்க நிர்வாகம் கூடிய கவனம் செலுத்த வேண்டும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

## மின் விநியோக விஸ்தரிப்பு

(உடுவில்)

பலவருடங்களாக சுன்னுகம் உப அலுவலகத்தினுல் சங்குவேலிக் கிராமத்தின் ஒரு பகுதிக்கு வழங்கப்பட்டுவந்த மின்சாரம் இம்மாததிலிருந்து உடுவில் உப அலுவலகத்தினுல் பொறுப்பேற்கபபட்டு முப்பதினுயிரம் ரூபா செலவில் மின் விஸ்தரிப்புச் செய்யப்பட்டுள்ளது.

அதிக காலமாகக் குறைந்தளவு மின் ஒளியைப் பெற்று வந்த சுமார் முப்பதிற்குமதிகமான பாவனையாளர்கள் இந் நடவடிக்கையினுல் போதிய அளவு ஒளி பெற்றுக்கொண்டதனுல் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

## கைது படலம் ஆரம்பம்

(சுன்னுகம்)

வயாவிளான் பகுதி வீதியால் செல்வோரைக் கைது செய்வதும், தீவிர விசாரணை மேற்கொள்வதும் சில நாள் இடைவெளியின் பின் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. வீடுகளைவிட்டு வெளியேறியவர்கள் அத்தியாவசியத் தேவைக்காக தத்தம் வீடுகளுக்குச் செல்லும் போதே இவ்வாருகக் கைது செய்யப்படுவதாகவும், விசாரிக்கப்படுவதுமாகக் கூறப்படுகிறது. கடந்த சில நாட்களாக இவ்வாருன நடவடிக்கை நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

## விஸ்தரிப்பு துரிதம்

(புங்குடுதீவு)

தீவுப்பகுதி பயணிகளின் போக்கு வரத்து வசதி கருதி அராலி இறங்கு துறையினை நூறு மீற்றர் தூரம் விஸ்தரிப்பதற்கான வேலைகள் துரிதமாக நடைபெறுகின்றன.

அராலியின் தெற்குத் துறைமுக மேடை தற்போது விஸ்தரிக்கப்படுகிறது. படகுகளைச் சிரமமின்றி அணைப்பதற்கு இது பெரிதும் உதவுமெனக் கருதப்படுகிறது.

இதே வேளையில் வேலணைப் பகுதியில் உள்ள இறங்கு துறை மேடையினையும் 100 மீற்றர் தூரம் விஸ்தரிப்பதற்கான வேலைகள் ஆரம்பமாகியுள்ளன.

## கலந்துரையாடல்

(உடுவில்)

யாழ். அபிவிருத்திச் சபையின் உடுவில் உப அலுவலகத்திற்குட்பட்ட பகுதிகளிலுள்ள சட்டவிரோதமின் பாவனையை தடை செய்வதற்காக சென்ற சனிக்கிழமை நடைபெறவிருந்த கலந்துரையாடல் பொது ஸ்தாபனங்கள், சனசமூக நிலையங்கள், விழிப்புக் குழுக்கள், நலன் விரும்பிகள் பங்குபற்ருத காரணத்தால் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமைக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

அன்று நடைபெறவிருக்கும் கலந்துரையாடலில் சகல பொது ஸ்தாபனங்களைச் சேர்ந்த அங்கத்தவர்களையும் தவருது சமுகமளிக்கும்படி உடுவில் உப அலுவலக அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் கேட்டுள்ளார்.

## சிநேகபூர்வ போட்டி

(கரவெட்டி)

கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரியில் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் கல்லூரியின் 19 வயது உதைபந்தாட்ட அணி, மாணவ முதல்வர் அணி, கல்லூரி அலுவலர் அணிகளுக்கிடையே சிநேகிதபூர்வ உதைபந்தாட்டப் போட்டியொன்று நடைபெற்றது.

இப் போட்டியில் 19 வயது அணியினரும், மாணவமுதல்வர் அணியினரும் மோதி முறையே 0: 5 என்ற ஜோல்களால் 19 வயது அணியினர் வெற்றி பெற்றனர்.

தொடர்ந்து நடைபெற்ற மாணவர் முதல்வர் அணிக்கும் கல்லூரி அலுவலர் அணிக்கும் நடைபெற்ற போட்டியில் 1:3 என்ற கோல்களால் மாணவ முதல்வர் அணியை அலுவலர் அணி தோற்கடித்தது. போட்டி முடிவுகளில் தேநீர் விருந்துபசாரமொன்றும் நடைபெற்றது.

★ துண்டிக்கப்பட்ட உறவைத் துளிர்க்கச் செய்ய முயற்சி

# ரஷ்ய - இஸ்ரேல் பேச்சு ஹெல்சிங்கியில் நிகழும்!

(லண்டன்)

சோவியத், இஸ்ரேலிய உயர் மட்டப் பிரதிநிதிகள் ஹெல்சிங்கியில் சந்தித்து இருதரப்பு உறவுக்குப் புத்துயிர் ஊட்டியது குறித்து விரிவாக ஆராயவுள்ளனர் என நேற்று அறிவிக்கப்பட்டது.

இச்சந்திப்பு 17ம் திகதி நடைபெறும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பரஸ்பரம் தூதரகங்களைத் திறப்பது குறித்து ராஜதந்திர மட்டத்தில் ஆராயப்படுமென்று அறிக்கைகள் கூறுகின்றன.

மீண்டும் உறவைப் புதுப்பிக்கலாமென்ற யோசனையை சோவியத் யூனியனே முதலில் வெளியிட்டிருந்தது.

இதன் பொருட்டு பேச்சுவார்த்தை நடத்தப்பட வேண்டியது அவசியம் என்றும் வலியுறுத்தப்பட்டது

இச் செய்தியை பின்னர் இஸ்ரேலியப் பிரதம மந்திரி திரு. பெரஸ் ஊர்ஜிதம் செய்தார்.

1967ம் வருடம் மத்திய கிழக்கு யுத்தத்தையடுத்து இஸ்ரேலுடனை உறவை சோவியத் யூனியன் துண்டித்துக் கொண்டது.

அதன்பின் இருநாடுகளுக்கும் இடையே உத்தியோக பூர்வ பேச்சுவார்த்தைகள் நடைபெறுவது இதுவே முதல் தடவை என்பது குறிப்பிடத்தக்கது.

ரஷ்ய, அமெரிக்க

## வெளிநாட்டு மந்திரிகள் வாஷிங்டனில் சந்திப்பர்

(வாஷிங்டன்)

சோவியத் அமெரிக்க வெளிநாட்டமைச்சர்கள் அடுத்த மாதம் வாஷிங்டனில் சந்தித்துப் பேச்சுவார்த்தைகள் நடத்தவுள்ளனர்.

மேற்படி நாடுகளினதும் தலைவர்கள் நடத்தவுள்ள உச்சி மாநாட்டு ஆலோசனைகளின் பொருட்டே இவ்விரு அமைச்சர்களும் சந்திக்கவுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஒபெக் ஸ்தாபனம்

## எண்ணெய் உற்பத்தி குறைக்கத் தீர்மானம்

(ஜெனீவா)

நாளொன்றுக்கு நாற்பது இலட்சம் பீப்பாய்களால் எண்ணெய் உற்பத்தியைக் குறைப்பதென ஒபெக் ஸ்தாபனத்தின் எண்ணெய் உற்பத்தித்துறை மந்திரிகள் தீர்மானித்துள்ளனர்.

இத் தீர்மானம் ஏகமனதாக எடுக்கப்பட்டதாக ஆலோசனைக் கூட்டத்தில் தலைவர் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

இதனுல் அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய சந்தையில் ஏற்பட்டுள்ள மந்த நிலையில் மாற்றம் ஏற்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

## பலவீனமென கருதலாகாது

(புதுடில்லி)

"பாரதம் சமத்துவ, சாத்வீக நோக்கத்துடன் செயற்படுவதை எவரும் பலவீனமெனக் கருதி விடக்கூடாது" என்று ஜனுதிபதி திரு. ஜியானி ஜெயில்சிங் தெரிவித்துள்ளார்.

## தேயிலை உற்பத்தி வீழ்ச்சி

(லண்டன்)

பங்களாதேஷ், பாரதம், கென்யா, இலங்கை ஆகிய நாடுகளில் தேயிலை உற்பத்தி வீழ்ச்சி அடைந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தென்னுபிரிக்க விவகாரம்

## ராஜீவின் யோசனைகள்: தட்சர் மட்டும் எதிர்ப்பு

(லண்டன்)

லண்டனில் நடைபெற்ற சிறிய அளவிலான உச்சி மாநாட்டில் தென்னுபிரிக்கா மீது பொருளாதாரத் தடை விதிக்கும் விடயத்தில் பாரதப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தியால் தெரிவிக்கப்பட்ட இரு யோசனைகளை மாநாட்டில் கலந்துகொண்ட ஐந்து நாடுகளினதும் தலைவர்கள் ஏற்றுக் கொண்டனர். ஆனுல் பிரிட்டிஷ் பிரதம மந்திரி திருமதி மார்கிரெட் தட்சர் மட்டுமே அவற்றை ஏற்றுக் கொள்ள மறுத்துவிட்டார்.

தென்னுபிரிக்காவுக்கு எதிரான நடவடிக்கைகளை மேலும் முன்னெடுத்துச் செல்வதென ஆறு நாடுகளினதும் தலைவர்கள் தீர்மானித்தனர். பிரிட்டிஷ் பிரதம மந்திரி மட்டும் தனித்து நின்று கொண்டார்.

## 'கல்வியே மூலாதாரம்'

(வேலணை)

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள சூழ்நிலை காரணமாக இங்கு நடைபெறவிருந்த இராப்போசன விருந்து வைபவத்தை ஆடம்பரமாக நடத்த முடியவில்லை. இருப்பினும் அந்த வழமையை கைவிடாமல் தேநீர் விருந்துபசாரம் அளிக்கப்பட்டுள்ளது. மாணவர்கள், கல்வியில் சிறந்து விளங்கி இக்கல்லூரியின் புகழை மேன்மேலும் வளர்க்க முற்பட வேண்டும். கல்வி ஒன்றுதான் எமது மூலாதார சொத்து"

இவ்வாறு வேலணை சேர். வைத்திலிங்கம் துரைச்சாமி மத்திய மகாவித்தியாலய வருடாந்த தேநீர் விருந்துபசார வைபவத்தில் அதிதியாக கலந்துகொண்டு உரையாற்றிய அதிபர் திரு. மு. சிவராசரத்தினம் குறிப்பிட்டார். உயர் மாணவர் மன்ற தலைவர் செல்வன் கஜேந்திரன் தலைமையில் இவ்வைபவம் நடைபெற்றது.

## கடைகளில் களவு அதிகரிப்பு

(குருநகர்)

இரவு வேளை குருநகர் பாங்ஷால் வீதியிலுள்ள தனியார் உணவு பங்கீட்டுக் கடையும், தம்பிப்பிள்ளை தியாகராசா என்பவரது பலசரக்குக் கடையும் முன்கதவு உடைக்கப்பட்டு கொள்ளையடிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

முன்கதவைப் பெயர்த்த கொள்ளையர் அதற்குப் பாவித்த அலவாங்கொன்றையும் கைவிட்டுச் சென்றுள்ளனர்.

அன்றிரவு சின்னக்கடை நான்காம் குறுக்குவீதியிலுள்ள ராஜகிரி ஸ்ரோர்ஸ் கதவைப் பெயர்க்க கொள்ளையரால் முயற்சிக்கப்பட்டு கைவிடப்பட்ட சம்பவமும் நிகழ்ந்துள்ளது. தம்பிப்பிள்ளை தியாகராசாவின் கடையில் மேசை லாச்சியில் வைத்திருந்த சில்லறைக் காசு ஆயிரம் ரூபா மட்டுமே திருட்டுப் போனதாகத் தெரிவிக்கப்பட்டது.

## மழைதந்த ஆறுதல்

(சுன்னுகம்)

சுன்னுகம், உடுவீல், இணுவில், மாவிட்டபுரம், ஏழாலை ஆகிய பகுதிகளில் நீண்டகால இடைவெளியின் பின் சுமாரான மழை பெய்துள்ளது. கொடிய வெப்பத்தின் தாக்கத்தினுல் அல்லலுற்ற அப்பகுதி மக்கள் இம்மழையின் மூலம் சிறிது ஆறுதலடைந்துள்ளனர். வெங்காயச் செய்கையிலீடுபட்டுள்ளவர்களுக்கு இம்மழை சிறிது பாதிப்பை ஏற்படுத்தியுள்ளதாலும், நெற்செய்கைக்குரிய ஆயத்த நடவடிக்கையான முதலா முழவுப்பணிக்கு வாய்ப்பானதாக அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

ஈழமுரசு

## போதை வஸ்து தொடர்பாக 1900 பேர் இலங்கை சிறைகளில்

இலங்கையில் போதைவஸ்து கடத்தல், பாவனை தொடர்பான குற்றங்களுக்காக கடந்த ஜனவரி மாதம் முதல் சுமார் ஆயிரத்தி தொள்ளாயிரம் பேர் சிறை வைக்கப்பட்டிருப்பதாக சிறைச்சாலைத் திணைக்களம் வெளியிட்ட செய்திக் குறிப்பொன்று தெரிவிக்கின்றது. சிறைவைக்கப்பட்டுள்ளோரில் முப்பத்தி ஆறுபேர் பெண்களாவர். இவர்களை வழிநடத்தி மறுவாழ்வளிப்பதற்காக எட்டு சிறைச்சாலை உத்தியாகத்தர்களுக்கு வெளிநாட்டுப் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. கட்டுநாயக்கா ஊடாகவே இவை கடத்தப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

துணைவேந்தர் 'வித்தி' அறிவிப்பு

# புதிய மாணவர்களை உள, உடல் ரீதியாக துன்புறுத்தல் தடை செய்யப்பட்டுள்ளது

யாழ். பல்கலைக்கழக புதிய கல்வியாண்டுக்குத் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கான ஆங்கில தகுதிகாண் பரீட்சை இன்று நடைபெறவுள்ளது. இதனைத் தொடர்ந்து அடுத்தவாரம் முதல் ஆங்கில வகுப்புக்கள் நடைபெறும். இதுதொடர்பாக யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சு.வித்தியானந்தன் மாணவர்களுக்கு விடுத்துள்ள வேண்டுகோளில் பின்வரும் விபரங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

பல்கலைக்கழக மாணவர்கள் கட்டாயம் அறிந்திருக்க வேண்டிய ஒழுங்குவிதிகள், பிரமாணங்கள் யாவும் உங்கள் அனைவருக்கும் வழங்கப்பட்டுள்ளதுடன், அதன்படி நடப்போம் என்ற உறுதிமொழியும் உங்களால் பல்கலைக்கழகத்திற்கு எழுத்து மூலம் வழங்கப்பட்டிருப்பதையும் நீங்கள் ஒவ்வொருவரும் நினைவில் வைத்துக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றேன்.

மாணவர்களின் மத்தியில் இணக்கமான சமூகச் சூழல் வளர்ச்சி ஏற்படுவதற்கான நிலைமைகளை வழிவகுக்கவும், அவர்கள் தமது படிப்பை வெற்றிகரமாக மேற்கொள்ளவும், பல்கலைக்கழகத்தின் கௌரவத்திற்கு ஒவ்வாத நடத்தையைத் தவிர்க்கும் பொருட்டும் மாணவர்கள் இவ்விதிகளையும் பிரமாணங்களையும் கட்டாயம் பின்பற்றுதல் அவசியமாகும். இவ்விதிகளையும் பிரமாணங்களையும் மீறுவோர் கடுமையான தண்டனைக்கு உட்படுவர்.

பல்கலைக்கழகத்தின் ஆசிரியர்கள், துணைவேந்தரால் அதிகாரம் அளிக்கப்பட்ட சிரேஷ்ட மாணவ ஆலோசகர், மாணவ ஆலோசகர்கள், மாஷல் ஆகியோர் ஒழுங்குமுறையின்மை, தகாதநடத்தை முதலியவற்றைத் தடுத்து நிறுத்தும் அதிகாரத்தைப் பெற்றுள்ளார்கள். அத்துடன் அத்தகு நிகழ்வுகளை எனது கவனத்திற்குக் கொண்டுவந்து ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளும் பொறுப்பும் உடையவர்கள்.

பல்கலைக்கழகத்துக்குள்ளே அல்லது வெளியே எந்த ஒரு மாணவரையோ வேறு ஒருவரையோ எந்த விதமான துன்புறுத்தல்களுக்கும் உட்படுத்தலாகாது. குறிப்பாக புதிய எந்த ஒரு மாணவரோ உளவியல் ரீதியாகவோ உடலியல் ரீதியாகவோ பாதிப்படையும் வகையில் துன்புறுத்தப்படுவதைப் பல்கலைக்கழகம் முற்றாகத் தடை செய்கிறது. மாணவர் ஒருவர் பல்கலைக்கழக விரிவுரைகள், கட்டுரை வகுப்புக்கள் முதலியவற்றுக்குப் புதிய மாணவர்கள் செல்வதற்குத் தடையாகவோ அல்லது அவற்றிற்கு இடையூறாகவோ நடந்து கொள்ளக்கூடாது.

சிரேஷ்ட மாணவர்கள் தமது சமூக பண்பாட்டுக் கடமைகள், பொறுப்புணர்வுகள் என்பவற்றை உணர்ந்து இப்பல்கலைக்கழகத்தின் மேம்பாட்டிற்கு ஒத்துழைக்கும்படி அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

## அவுஸ்திரேலியா சென்ற 56 தமிழ் இளைஞரின் கதை

அவுஸ்திரேலியாவில் வேலை வாய்ப்பு பெற்றுத்தருவதாக கூறி ஏஜன்சியால் அழைத்துச் செல்லப்பட்ட சுமார் ஐம்பத்தாறு இளைஞர்கள் இடை நடுவில் ஹோட்டலில் ஒரு மாதம் தங்கிய பின்னர் நாடு திரும்பினர்.

இவர்களில் அனேகமானோர் வட பகுதி இளைஞர்களே. இந்த இளைஞரிடம் தலா நாற்பத்தையாயிரம் ரூபாவை கட்டணமாக அறவிட்ட ஏஜன்சி முதலில் இவர்களை சிங்கப்பூருக்கு அழைத்து சென்றது. பின்னர் இந்தோனிஷியாவுக்கு கூட்டிச் சென்று அங்குள்ள ஹோட்டல் ஒன்றில் ஒரு மாதம் தங்க வைத்த பின் அந்த ஏஜன்ஸி ஊழியர் மாயமாக மறைந்து விட்டாராம்.

செய்வதறியாது திகைத்து நின்ற இந்த இளைஞர்களின் ரிட்டேண் விமான டிக்கற்றும் காலாவதியாகி விட்டது. அங்குள்ள ஒரு இந்திய அதிகாரிக்கு தமது நிலைமையை விளக்கி அவரது உதவியுடன் தமது ரிக்கற்றை புதுப்பித்துக் கொண்டு நாடு திரும்பியுள்ளனர்.

### இலங்கைக்கான...

மீண்டும் ஆரம்பித்துள்ள பேச்சுவார்த்தை உலகத்தை ஏமாற்றுவதற்காக இலங்கை அரசின் முயற்சி என்றும் சுட்டிக்காட்டியுள்ள புலிகள் தலைவர் பிரபாகரன், "தனித் தமிழ் ராஜ்யத்துக்கான எல்லையை நிர்ணயிப்பது தான் இனிமேல் பேச்சுவார்த்தைக்கான விஷயமாக இருக்க முடியும்" எனவும் 'நியூஸ் வீக்' பேட்டியில் குறிப்பிட்டுள்ளார்.

### புளொட்...

சீர்குலைத்து பிளவுபடுத்த முயற்சித்து வருவதாகவும், அவர்களது நடவடிக்கை பலனளிக்கவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

புளொட் தமது தலைமையிலேயே இப்போதும் இயங்குவதாகவும் இங்கு மேலும் சுட்டிக்காட்டியுள்ளது.

### அரச அதிபர்...

டது சம்பந்தமாக யாழ். மாவட்ட காணிப்பதிவாளர் எனக்கு விடுத்த முறைப்பாட்டைத் தொடர்ந்து சந்தேகத்துக்குரிய ஊழியர்கள் மீது விசாரணை எம்மால் நடத்தப்பட்டு வருகிறது" என்று அரச அதிபர் அறிவித்துள்ளார்.

## பால் விற்பனை, சேகரிப்பு நிலையங்கள் திறப்புவிழா

யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவு சங்கம் யாழ்ப்பாணம் மின்சார நிலைய வீதியில் புதிய பால் விற்பனை நிலையத்தை நாளை வியாழக்கிழமை ஆரம்பித்து வைக்கிறது. அன்று காலை பதினொரு மணியளவில் யாழ் - மாநகர ஆணையாளர் திரு. சி. வி. கே. சிவஞானத்தினால் இது திறந்து வைக்கப்படும்.

இவ்வைபவத்தில் யாழ். அரசாங்க அதிபர் திரு. எம் பஞ்சலிங்கம் பிரதி திட்டமிடல் பணிப்பாளர் திரு. சு. சிவதாசன் ஆகியோர் விசேட அதிதிகளாக கலந்து கொள்வார்கள்.

இணுவில் ஆஸ்பத்திரிக்கு அருகில் ஒரு புதிய பால் சேகரிப்பு நிலையம் நாளை காலை ஏழரை மணிக்கு யாழ். கல்விப் பணிப்பாளர் திரு. சுந்தரலிங்கத்தினால் திறந்து வைக்கப்படும்.

இத்திறப்புவிழாவிலும் யாழ். அரசாங்க அதிபரும், பிரதி திட்டமிடல் பணிப்பாளரும் அதிதிகளாக கலந்து கொள்வார்கள்.

## மாங்குளம் ஒலுமடுவில் பன்னிரண்டு இளைஞர் கைது

(வண்ணார்பண்ணை)

மாங்குளம் ஒலுமடு எனும் இடத்தில் இராணுவத்தினரால பன்னிரண்டு இளைஞர்கள் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்டவர்கள் அனைவரும் சாதாரண இளைஞர்களென தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுமார் இரு நூறு இராணுவத்தினர் நடைபவனியாகவும் கவச வாகனங்களிலும் மூன்று மூகமூடி தரித்த இளைஞர்களுடன் வந்து அப்பகுதியினைச் சுற்றி வளைத்து இளைஞர்களைக் கைது செய்தனராம்.

அன்றைய தினம் அரசாங்க அலுவலகங்களிலிருந்து கடமை புரிந்தவர்களையும், அப்பகுதியிலுள்ளவர்களையும் ஒரே இடத்திற்கு வருமாறு இராணுவத்தினர் பணித்துவிட்டே இவர்களைக் கைது செய்துள்ளனர்.

### கோட்டை ஷெல்...

மேற்கொள்ளப்பட்டன. போராளிகளும் பதிலுக்கு கோட்டை முகாம் மீது 'மோட்டோ ஷெல்' தாக்குதல மேற்கொண்டனர்.

கோட்டை முகாமிலிருந்து மேற்கொள்ளப்பட்ட ஷெல் தாக்குதல்களால் யாழ். பெரிய கடையிலுள்ள சுமார் பத்துக்கு மேற்பட்ட கடைகள் சேதமடைந்தன. ஷெல் வீதியில் விழுந்து வெடித்துச் சிதறி கடைகளின் இரும்புக் கதவுகளையும் துளைத்துக் கொண்டு சென்று கடைகளைச் சேதப்படுத்தியுள்ளன.

இதனால் பெரிய கடையிலுள்ள அஜந்தாஸ் புடைவைக் கடையிலுள்ள துணிகளும், புடைவைகளும் நேற்றுக்காலை வரையில் எரிந்துகொண்டிருந்தன. காலையில் யாழ். மாநகர சபையின் தீ அணைக்கும் படை சென்றே நெருப்பை அணைத்தது. இதனைத் தவிர இதற்கு அருகேயுள்ள பல கடைகளின் கண்ணுடிகளும் உடைந்து சேதமாகியுள்ளன.

ஹரன் தியேட்டரின் அருகேயுள்ள நான்கு வீடுகளும் ஷெல் தாக்குதலால் சேதமடைந்துள்ளன. வீட்டிலுள்ளவர்கள் மோதல் ஆரம்பமானவுடனேயே வீட்டைவிட்டு வெளியே சென்றுவிட்டதால் உயிர் ஆபத்துக்கள் எதுவும் ஏற்படவில்லை.

கோட்டையிலிருந்து மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் ஹோட்டல் அசோக், யாழ். தபால் நிலையம் என்பனவும் சிறிது சேதமடைந்துள்ளன.

### ராணுவத் தீர்வா...

படையில் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களுக்கும் இலங்கை அரசுக்கும் இடையே தற்போது பேச்சுவார்த்தை நடைபெற்று வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இலங்கை ஜனதிபதியுடனும் அமைச்சர்களுடனும் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு இக்கூட்டணியின் தலைவர்கள் இம்மாதம் இரண்டாவது வாரத்தில் கொழும்பு செல்வர் என்றும் சொன்னர் அவர்.

"இப் பிரச்சினை தீர்வதற்கு இந்திய அரசு விதித்திருந்த காலக்கெடு என்னவாயிற்று? என உறுப்பினர் திரு. கஸ்வத்சிங் கேட்டதற்கு இம்மாதிரிப பிரச்சினைக்கு காலக்கெடு நிர்ணயிப்பது சிரமம் என்றும் அரசியல் தீர்வுகாண வேண்டுப் என இந்தியா இலங்கையிடம் வற்புறுத்தி வருவதாகவும் திரு. நாராயணன் சொன்னர்.

இலங்கையில் போர் நிறுத்தத்தைக் கண்காணிக்க ஐக்கிய நாடுகள் அமைதிப்படையை நிறுத்த வேண்டும் என இந்தியா கோராது என்றும் இதனை சர்வதேசப் பிரச்சினையாக்க இந்தியா விரும்பவில்லை என்றும் குறிப்பிட்டார் அவர்.

### கமாண்டோவுடன்...

இந்த மோதலின்போது பல கொமாண்டோக்கள் பலத்த காயங்களுக்குள்ளாகி கடலில் குதித்ததாகவும் அவர்களில் பலர் இறந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. படகுகளும் பலத்த சேதங்களுக்குள்ளானது.

### ராணுவ தடை...

இப்பகுதியில் ராணுவ ரோந்து நடைபெறுகின்றது.

அதேவேளையில் வவுனியா ராணுவ முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த பதின்மூன்று பேர் பூஸாவுக்கு அனுப்பப்பட்டுள்ளனர். இவர்களில் ஒருவர் நெடுங்கேணியில் கைதான தாபோதரம்பிள்ளை சரஸ்வதி என்ற பெண்மணியாவார்.

வர்த்தகர் சங்கம்

## பாதுகாப்பு கேட்கிறது

நேற்று முன்தினம் இரவு கோட்டை முகாமில் இருந்து மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களினல் பெரிய கடை வீதியிலுள்ள பல வர்த்தக ஸ்தாபனங்கள் பெரும் சேதத்துக்குள்ளாகியுள்ளதால், மேலும் இவ்வாறன சம்பவங்கள் ஏற்படாதவாறு தகுந்த நடவடிக்கைகள் எடுத்து வர்த்தக நிலையங்களுக்கு பூரண பாதுகாப்பு ஒழுங்குகள் செய்து தருமாறு யாழ்ப்பாண வர்த்தகர்கள் சங்கம் யாழ். அரசாங்க அதிபரிடம் மகஜர் மூலம் வேண்டியுள்ளது.

## நயினதீவு உற்சவம் ஆரம்பம்

(புங்குடுதீவு)

வரலாற்று பெருமை பெற்ற நயினதீவு ஸ்ரீ நாகபூஷணியம்மன் ஆலய வருடாந்த மகோற்சவம் நேற்றுக் காலை பக்திபரவசமான சூழ்நிலையில் கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

நயினதீவின் பல பகுதிகளையும் சேர்ந்த பக்தர்கள் இவ் உற்சவத்திற் கலந்து கொண்டனர். வெளியிடங்களைச் சேர்ந்த பக்தர்கள் தொகை மிகக் குறைவாகவே காணப்பட்டது. இம் மாதம் 11ம் திகதி முதல் 20ம் திகதி வரை ஸ்ரீ நாகபூஷணியம்மன் யாத்திரிகர் அன்னதான சபையினர் "அமுதசுரபி" மண்டபத்தில் யாத்திரிகர்களுக்கு வழமைபோல் அன்னதானம் வழங்க ஏற்பாடு செய்துள்ளனர்.

## பண்டிதர் நூல் அரங்கேற்றம்

பண்டிதர் சுப்பிரமணியம் அவர்களின் சௌந்தரியலகரி நூல் அரங்கேற்று விழா வெள்ளிக்கிழமை காலை எட்டு முப்பது மணிக்கு ஆவரங்கால் சிவன் தேவஸ்தான வசந்த மண்டபத்தில் நடைபெறவுள்ளது. யாழ். பல்கலைக் கழகப் பதிவாளர்கள் திரு. வே. ந. சிவராஜா தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவில் திருமதி வசந்தா வைத்தியநாதன் அரங்கேற்றுரை நிகழ்த்துவார்.

## கிராமசேவகர் எச்சரித்து விடுதலை

இராணுவ முகாமொன்றுக்கு நேற்றுக்காலை அழைக்கப்பட்டிருந்த மானிப்பாய் கிராமசேவகர், முகாமுக்குச் செல்லும் வழியில் இனம் தெரியாதவர்களால் நேற்றுக்காலை கடத்திச் செல்லபபட்டு பலமான எச்சரிக்கையின் பின்னர் விடுவிக்கப்பட்டார்.

## திருநாள்

(வண்ணார்பண்ணை)

நாவாந்துறை புனித மரியாள் ஆலய வருடாந்த திருநாள் இன்று மாலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது. தினமும் மாலை நவநாள் ஆராதனைகள் இடம்பெறும்.

"ஈழமுரசு" சாயிபாபா அட்வர்டைசிங் அசோஸியேற்ஸ் ஸ்தாபனத்தாரால் 140, நாவலர் வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள அவர்களது அச்சகப் பகுதியில் 6-8-1986 புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது; தொலைபேசி: 22487